ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் க்ரு’ஷ்ணஜனனம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் க்ரு’ஷ்ணஜனனம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாயமேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆ - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் ⋆ கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆ வேண்டிய
வேதங்களோதி ⋆ விரைந்து கிழியறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு ⋆ பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆ உன்
சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர்வாழ் ⋆ இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்திலுள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம்சொல்லி ⋆

prapatti dot com
sunder kidāmbi

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி
பாய ⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிராக்க வல்ல ⋆

prapatti dot com
sunder kidambi
sunder kidāmbi

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
    கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
    சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித் ⋆
    திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
    உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
அந்நாளே ⋆ அடியோங்கள் அடிக்குடில் ⋆
    வீடுபெற்றுய்ந்ததுகாண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
    திருமதுரையுள் சிலைகுனித்து ⋆ ஐந்தலைய
பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
    உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக் கொன்றுமில்லா ⋆
    அணிகோட்டியர் கோன் ⋆ அபிமான துங்கன்
செல்வனைப்போலத் ⋆
    திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
    நாமம் பல பரவி ⋆



prapatti dot com sunder kidambi sunder kidāmbi

பல்வகையாலும் பவித்திரனே !⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப்⋆
பரமேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆
நமோ நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## க்ரு’ஷ்ண சனன பாசுரங்கள்

### பெரியாழ்வார் திருமொழி – வண்ணமாடங்கள்

பேணிச் சீருடைப்⋆ பிள்ளை பிறந்தினில்⋆
காணத் தாம் புகுவார்⋆ புக்குப் போதுவார்⋆
ஆணொப்பார்⋆ இவன் நேரில்லை காண்⋆ திரு -
வோணத் தான்⋆ உலகாளும் என்பார்களே ‖ **1.2.3** ‖

### பெரியாழ்வார் திருமொழி – சீதக்கடல்

மத்தக் களிற்று⋆ வசுதேவர் தம்முடைச்⋆
சித்தம் பிரியாத⋆ தேவகி தன் வயிற்றில்⋆
அத்தத்தின் பத்தாநாள்⋆ தோன்றிய அச்சுதன்⋆
முத்தம் இருந்தவா காணீரே⋆
முகிழ் நகையீர் ! வந்து காணீரே ! ‖ **1.3.6** ‖

பருவம் நிரம்பாமே⋆ பாரெல்லாம் உய்யத்⋆
திருவின் வடிவொக்கும்⋆ தேவகி பெற்ற⋆

உருவு கரிய ⋆ ஒளி மணிவண்ணன் ⋆
புருவம் இருந்தவா காணீரே ⋆
பூண்முலையீர் ! வந்து காணீரே ! ॥ **1.3.17** ॥

## பெரியாழ்வார் திருமொழி – மாணிக்கங்கட்டி

சங்கின் வலம்புரியும் ⋆ சேவடிக் கிண்கிணியும் ⋆
அங்கைச் சரிவளையும் ⋆ நாணும் அரைத்தொடரும் ⋆
அங்கண் விசும்பில் ⋆ அமரர்கள் போத்தந்தார் ⋆
செங்கண் கருமுகிலே ! தாலேலோ ! ⋆
தேவகி சிங்கமே ! தாலேலோ ! ॥ **1.4.4** ॥

## பெரியாழ்வார் திருமொழி – மெச்சூது

செப்பிள மென்முலைத் ⋆ தேவகி நங்கைக்கு ⋆
சொப்படத் தோன்றித் ⋆ தொறுப்பாடியோம் வைத்த ⋆
துப்பமும் பாலும் ⋆ தயிரும் விழுங்கிய ⋆
அப்பன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ॥ **2.1.6** ॥

## பெரியாழ்வார் திருமொழி – துப்புடையாரை

நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன் ⋆
நமன் தமர் பற்றி நலிந்திட்டு ⋆ இந்த
ஊனே புகேயென்று மோதும்போது ⋆
அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன் ⋆
வானேய் வானவர் தங்கள் ஈசா ! ⋆
மதுரைப் பிறந்த மா மாயனே ! ⋆ என்
ஆனாய் ! நீ என்னைக் காக்க வேண்டும் ⋆
அரங்கத்தரவணைப் பள்ளியானே ! ॥ **4.10.8** ॥

## பெரியாழ்வார் திருமொழி – துக்கச்சுழலையை

‡ துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த ⋆
வலையை அறப் பறித்து ⋆
புக்கினில் புக்குன்னைக் கண்டு கொண்டேன் ⋆
இனிப் போக விடுவதுண்டே ⋆
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத ⋆
இழந்தவள் தன் வயிற்றில் ⋆
சிக்கென வந்து பிறந்து நின்றாய் ! ⋆
திரு மாலிருஞ்சோலை எந்தாய் ! ॥ **5.3.1** ॥

## நாச்சியார் திருமொழி – தெள்ளியார் பலர்

பூ மகன் புகழ் வானவர் ⋆ போற்றுதற் -
கா மகன் ⋆ அணி வாணுதல் ⋆ தேவகி
மாமகன் ⋆ மிகு சீர் ⋆ வசுதேவர் தம் ⋆
கோமகன் வரில் ⋆ கூடிடு கூடலே ! ॥ **4.3** ॥

## நாச்சியார் திருமொழி – மற்றிருந்தீர்

‡ மற்றிருந்தீர்கட்கறியலாகா ⋆
மாதவன் என்பதோர் அன்பு தன்னை ⋆
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம் ⋆
ஊமையரோடு செவிடர் வார்த்தை ⋆
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் ⋆
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி ⋆
மற் பொருந்தாமற் களம் அடைந்த ⋆
மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின் ॥ **12.1** ॥

## பெரிய திருமொழி – மான் கொண்ட

‡ மன்னு மதுரை ⋆ வசுதேவர் வாழ் முதலை ⋆
நன்னறையூர் ⋆ நின்ற நம்பியை ⋆ வம்பவிழ் தார்க்
கன்னவிலும் தோளான் ⋆ கலியன் ஒலி வல்லார் ⋆
பொன்னுலகில் வானவர்க்குப் ⋆ புத்தேளிர் ஆகுவரே ‖ **6.8.10** ‖

## பெரிய திருமொழி – தந்தை காலில்

‡ தந்தை காலில் பெரு விலங்கு ⋆
தாள் அவிழ ⋆ நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார் ⋆
மருவி நின்ற ஊர் போலும் ⋆
முந்தி வானம் மழை பொழியும் ⋆
மூவா உருவில் மறையாளர் ⋆
அந்தி மூன்றும் அனல் ஓம்பும் ⋆
அணியார் வீதி அழுந்தூரே ‖ **7.5.1** ‖

## பெரிய திருமொழி – தந்தை காலில்

‡ தந்தை காலில் விலங்கற ⋆ வந்து தோன்றிய
தோன்றல் பின் ⋆ தமியேன் தன்
சிந்தை போயிற்றுத் ⋆ திருவருள் அவனிடைப்
பெறும் அளவிருந்தேனை ⋆
அந்தி காவலன் அமுதுறு பசுங்கதிர்
அவைசுட ⋆ அதனோடும் ⋆
மந்த மாருதம் வன முலை தடவந்து ⋆
வலிசெய்வதொழியாதே ! ‖ **8.5.1** ‖



sunder kidambi prapatti dot com

## பெரிய திருமொழி – வானோர் அளவும்

துவரிக் கனிவாய் நில மங்கை ⋆
    துயர் தீர்ந்துய்யப் பாரதத்துள் ⋆
இவரித்தரசர் தடுமாற ⋆
    இருள் நாள் பிறந்த அம்மானை ⋆
உவரியோதம் முத்துந்த ⋆
    ஒரு பால் ஒரு பால் ஒண் செந்நெல் ⋆
கவரி வீசும் கண்ணபுரத்து ⋆
    அடியேன் கண்டு கொண்டேனே ‖ **8.8.9** ‖

## பெரிய திருமொழி – மூவரில்

‡ நேசம் இலாதவர்க்கும் ⋆ நினையாதவர்க்கும் அரியான் ⋆
    வாச மலர்ப் பொழில் சூழ் ⋆ வட மாமதுரைப் பிறந்தான் ⋆
தேசம் எல்லாம் வணங்கும் ⋆ திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
    கேசவ நம்பி தன்னைக் ⋆ கெண்டை ஒண் கண்ணி
                                        காணுங்கொலோ ‖ **9.9.6** ‖

## பெரிய திருமொழி – பூங்கோதை

பெற்றார் தளை கழலப் ⋆ பேர்ந்தங்கயல் இடத்து ⋆
    உற்றார் ஒருவரும் இன்றி ⋆ உலகினில் ⋆
மற்றாரும் அஞ்சப் போய் ⋆ வஞ்சப் பெண் நஞ்சுண்ட ⋆
    கற்றாயனே ! கொட்டாய் சப்பாணி ! ⋆
                    கார் வண்ணனே ! கொட்டாய் சப்பாணி ‖ **10.5.4** ‖

## பெரிய திருமொழி – மானமரும்

தந்தை தளை கழலத் ⋆ தோன்றிப் போய் ⋆ ஆய்ப்பாடி
    நந்தன் குல மதலையாய் ⋆ வளர்ந்தான் காணேடீ ⋆

நந்தன் குல மதலையாய் வளர்ந்தான் ⋆ நான்முகற்குத்
தந்தை காண் ⋆ எந்தை பெருமான் காண் சாழலே ॥ **11.5.2** ॥

### பொய்கையாழ்வார் அருளிச்செய்த – முதல் திருவந்தாதி

பெற்றார் தளை கழலப் ⋆ பேர்ந்தோர் குறள் உருவாய் ⋆
செற்றார் படி கடந்த செங்கண் மால் ⋆ நற்றாமரை
மலர்ச் சேவடியை ⋆ வானவர் கை கூப்பி ⋆
நிரை மலர் கொண்டு ⋆ ஏத்துவரால் நின்று ॥ **20** ॥

## கோகுல ப்ரவேசம்

### பெரியாழ்வார் திருமொழி – சீதக்கடல்

‡ சீதக்கடலுள் ⋆ அமுதன்ன தேவகி ⋆
கோதைக் குழலாள் ⋆ அசோதைக்குப் போத்தந்த ⋆
பேதைக் குழவி ⋆ பிடித்துச் சுவைத்துண்ணும் ⋆
பாதக் கமலங்கள் காணீரே ⋆
பவள வாயீர் ! வந்து காணீரே ! ॥ **1.3.1** ॥

வண்டமர் பூங்குழல் ⋆ ஆய்ச்சி மகனாகக் ⋆
கொண்டு வளர்க்கின்ற ⋆ கோவலக் குட்டற்கு ⋆
அண்டமும் நாடும் ⋆ அடங்க விழுங்கிய ⋆
கண்டம் இருந்தவா காணீரே ⋆
காரிகையீர் ! வந்து காணீரே ! ॥ **1.3.13** ॥

### பெரியாழ்வார் திருமொழி – மெச்சூது

தத்துக் கொண்டாள் கொலோ ⋆ தானே பெற்றாள் கொலோ ⋆
சித்தம் அனையாள் ⋆ அசோதை இளஞ்சிங்கம் ⋆
கொத்தார் கருங்குழல் ⋆ கோபால கோளரி ⋆

அத்தன் வந்தப்பூச்சி காட்டுகின்றான் ⋆
அம்மனே ! அப்பூச்சி காட்டுகின்றான் ‖ **2.1.7** ‖

### ஆண்டாள் அருளிச்செய்த – திருப்பாவை

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத் ⋆
தூய பெருநீர் யமுனைத் துறைவனை ⋆
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத் ⋆
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத் ⋆
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது ⋆
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் ⋆
போய பிழையும் புகுதருவான் நின்றனவும் ⋆
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம் பாவாய் ‖ **5** ‖

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ⋆ ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் ⋆
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த ⋆
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் ⋆
நெருப்பென்ன நின்ற நெடுமாலே ⋆ உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில் ⋆
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி ⋆
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம் பாவாய் ‖ **25** ‖

### நாச்சியார் திருமொழி – கோழியழைப்பதன்

கஞ்சன் வலை வைத்த அன்று ⋆
கார் இருள் எல்லில் பிழைத்து ⋆
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் ⋆
நின்ற இக் கன்னியரோமை ⋆

அஞ்ச உரப்பாள் அசோதை ⋆
    ஆணாட விட்டிட்டிருக்கும் ⋆
வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட ⋆
    மகிமை இலீ ! கூறை தாராய் ॥ **3.9** ॥

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

அம்புலாவு மீனும் ஆகி ⋆ ஆமை ஆகி ஆழியார் ⋆
    தம் பிரானும் ஆகி மிக்கது ⋆ அன்பு மிக்கதன்றியும் ⋆
கொம்பராவு நுண்மருங்குல் ⋆ ஆயர் மாதர் பிள்ளையாய் ⋆
    எம்பிரானும் ஆய வண்ணம் ⋆ என்கொலோ எம் ஈசனே ! ॥ **35** ॥

ஆடகத்த பூண் முலை ⋆ யசோதை ஆய்ச்சி பிள்ளையாய் ⋆
    சாடுதைத்தோர் புள்ளதாவி ⋆ கள்ள தாய பேய்மகள் ⋆
வீட வைத்த வெய்ய கொங்கை ⋆ ஐய பால் அமுது செய்து ⋆
    ஆடகக் கை மாதர் வாய் அமுதம் ⋆ உண்டதென் கொலோ ॥ **36** ॥

## பெரிய திருமொழி – காசையாடை

பந்தணைந்த மெல் விரலாள் ⋆ பாவை தன் காரணத்தால் ⋆
    வெந் திறலேறேழும் ⋆ வென்ற வேந்தன் விரி புகழ் சேர் ⋆
நந்தன் மைந்தன் ஆக ஆகும் ⋆ நம்பி நம் பெருமான் ⋆
    எந்தை தந்தை தம் பெருமான் ⋆ எவ்வுள் கிடந்தானே ॥ **2.2.4** ॥

## பெரிய திருமொழி – தீதறு

தந்தை மனம் உந்து துயர் நந்த இருள் வந்த விறல் ⋆
    நந்தன் மதலை ⋆
எந்தை இவன் என்றமரர் கந்த மலர் கொண்டு தொழ ⋆
    நின்ற நகர் தான் ⋆

மந்த முழவோசை மழை ஆக எழு கார் ⋆
    மயில்களாடு பொழில் சூழ் ⋆
நந்தி பணிசெய்த நகர் ⋆ நந்திபுர விண்ணகரம்
    நண்ணு மனமே ‖ **5.10.7** ‖

## பெரிய திருமொழி – விண்ணவர் தங்கள்

நந்தன் மதலை ⋆ நில மங்கை நல் துணைவன் ⋆
    அந்த முதல்வன் ⋆ அமரர்கள் தம் பெருமான் ⋆
கந்தம் கமழ் ⋆ காயா வண்ணன் கதிர் முடிமேல் ⋆
    கொந்து நறுந் துழாய் ⋆ கொண்டூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.9** ‖

## பெரிய திருமொழி – மானமுடைத்து

மண்மகள் கேள்வன் மலர் மங்கை நாயகன் ⋆
    நந்தன் பெற்ற மதலை ⋆
அண்ணல் இலைக் குழல் ஊதி நம் சேரிக்கே ⋆
    அல்லுத் தான் வந்த பின்னை ⋆
கண்மலர் சோர்ந்து முலைவந்து விம்மிக் ⋆
    கமலச் செவ்வாய் வெளுப்ப ⋆
என்மகள் வண்ணம் இருக்கின்றவா நங்காய் ! ⋆
    என் செய்கேன் என் செய்கேனோ ‖ **10.7.6** ‖

## பெரிய திருமொழி – குன்றமொன்றெடுத்து

அங்கோர் ஆய்க்குலத்துள் ⋆ வளர்ந்து சென்று ⋆
    அங்கோர் ⋆ தாய் உருவாகி வந்தவள் ⋆
கொங்கை நஞ்சுண்ட ⋆ கோயின்மை கொலோ ⋆
    திங்கள் வெங்கதிர் ⋆ சீறுகின்றதே ‖ **11.1.4** ‖

## ஆயர்பாடியில் கொண்டாட்டம்

### பெரியாழ்வார் திருமொழி – வண்ணமாடங்கள்

‡ வண்ண மாடங்கள் சூழ் ⋆ திருக்கோட்டியூர் ⋆
கண்ணன் கேசவன் ⋆ நம்பி பிறந்தினில் ⋆
எண்ணெய் சுண்ணம் ⋆ எதிர் எதிர் தூவிடக் ⋆
கண்ணன் முற்றம் ⋆ கலந்தளறாயிற்றே ‖ **1.2.1** ‖

ஓடுவார் விழுவார் ⋆ உகந்தாலிப்பார் ⋆
நாடுவார் நம்பிரான் ⋆ எங்குற்றான் என்பார் ⋆
பாடுவார்களும் ⋆ பல் பறை கொட்டநின்று ⋆
ஆடுவார்களும் ⋆ ஆயிற்றாய்ப் பாடியே ‖ **1.2.2** ‖

உறியை முற்றத்து ⋆ உருட்டி நின்றாடுவார் ⋆
நறு நெய் பால் தயிர் ⋆ நன்றாகத் தூவுவார் ⋆
செறிமென் கூந்தல் ⋆ அவிழத் திளைத்து ⋆ எங்கும்
அறிவழிந்தனர் ⋆ ஆய்ப்பாடி ஆயரே ‖ **1.2.4** ‖

கொண்ட தாளுறி ⋆ கோலக் கொடுமழு ⋆
தண்டினர் ⋆ பறியோலைச் சயனத்தர் ⋆
விண்டமுல்லை ⋆ அரும்பன்ன பல்லினர் ⋆
அண்டர் மிண்டிப் ⋆ புகுந்து நெய் ஆடினார் ‖ **1.2.5** ‖

பத்து நாளும் கடந்த ⋆ இரண்டாநாள் ⋆
எத்திசையும் ⋆ சயமரம் கோடித்து ⋆
மத்த மாமலை ⋆ தாங்கிய மைந்தனை ⋆
உத்தானம் செய்து ⋆ உகந்தனர் ஆயரே ‖ **1.2.8** ‖

திரு தேவகீசிங்கன் திருவடிகளே சரணம்

prapatti.com sunder kidambi